CCT CENTRE FOR COMBATING TOBACCO

CENTRE FOR COMBATING TOBACCO
Faculty of Medicine, University of Colombo
40/18, Park Road, Colombo 5, Sri Lanka
Tel:+94 112 599 852, +94112581571
Fax: +94112581572
Email: tobaccounmasked@gmail.com
Web: www.cct.lk / www.tobaccounmasked.lk

**சர்வதேச புகையிலை எதிர்ப்புத் தினம்- மே மாதம் 31ம் திகதி 2019**

உலக சுகாதார ஸ்தாபனமானது (World Health Organization) மே மாதம் 31 ஆம் தேதியை உலக புகையிலை எதிர்ப்புத் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இப் பிரகடனத்தின் முக்கிய குறிக்கோளானது புகையிலை பயன்பாட்டின் பாரதூரமான தீய விளைவுகள் மற்றும் இரண்டாம் நிலை புகைத்தலின் தீய விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதலாகும். இவ்வருட புகையிலை எதிர்ப்பு தினமானது "புகையிலை மற்றும் நுரையீரல் சுகாதாரத்தினை" பிரதான தொனிப்பொருளாக கொண்டுள்ளது. அதாவது,

- புகையிலை பயன்பாடானது புற்று நோயில் இருந்து நாள்பட்ட சுவாச நோய் வரை மக்களின் நுரையீரல் சுகாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது,
- நுரையீரல் சுகாதாரமானது அனைத்து மக்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வில் அடிப்படை பங்கை வகிக்கின்றது,

சிகரெட் புகைத்தலானது உடலின் ஒவ்வொரு உறுப்பையும் பாதிப்படையை செய்வதால் உடலில் பல நோய்கள் ஏற்படுகின்றன. இது சுவாச தொகுதி, சுற்றோட்ட தொகுதி, இனப்பெருக்க தொகுதி, தோல், கண்களில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் புற்றுநோய்கள் ஏற்படுவதற்கும் வழிவகுக்கிறது. அதே போல் இரண்டாம் நிலை புகைத்தலும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும். இரண்டாம் நிலை புகைத்தலானது குறிப்பாக குழந்தைகளிலும், சிறுவர்களிலும் சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. குறிப்பாக இவற்றுள் தொடர்ச்சியான ஆஸ்துமா பிரச்சினைகள் மற்றும் சுவாச நோய்கள் உள்ளடங்கும்.

ஆனால் புகையிலை தொழிற்துறையானது புகைப்பிடிக்கும் பழக்கத்திலிருந்து மக்களைத் தடுக்கக்கூடிய கொள்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பல்வேறு தலையீடுகள் மற்றும் இடையூறுகளை மேற்கொண்டுவருகிறது. புகையிலையின் தொழிற்துறையின் இறுதி இலக்கானது புகையிலை நுகர்வை அதிகரித்து உலகெங்கிலுமுள்ள மில்லியன் கணக்கான மக்களில் நுரையீரல் பாதிப்பை ஏற்படுத்தி புகையிலை தொழிற்துறையில் இலாபம் மற்றும் உற்பத்தியை விரிவாக்குவதாகும்.

போலி தரவுகளை வெளிப்படுத்துதல், விஞ்ஞானரீதியாக நிரூபிக்கப்படாததுடன் புகையிலை தொழிற்துறையினால் நிதி வழங்கப்பட்ட ஆய்வு அறிக்கைகள், சுகாதார துறையின் அரச அதிகாரிகளுக்கு தமது அனுசரணைகளை வழங்கி தமது செல்வாக்கை செலுத்துதல், சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் ஊக்குவிப்புகளின் மூலம் பொது கருத்துக்களை கையாள்தல், சமூக நலத்திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் அவர்களைப் பற்றிய ஒரு போலியான ஒரு தோற்றத்தை காண்பித்தல், புகையிலை பயிர்ச்செய்கையில் தலையீடு செய்தல், சட்டவிரோதமான புகையிலை வியாபாரத்தில் ஈடுபடுதல், தவறான புகையிலை வரி மற்றும் விலை தொடர்பான சிக்கல்களை வெளியிடுதல் என்பன புகையிலைத் தொழிற்துறையின் மூலம் உள்நாட்டில் பயன்படுத்தப்படும் சில குறுக்கீடுகளாகும். இத்தகைய தலையீடுகள் பற்றிய விபரங்களை www.tobaccounmasked.lk என்ற இணையதள முகவரியின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். TobaccoUnmasked_என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தின் புகையிலைக் கட்டுப்பாடு தொடர்பான சட்டவாக்கம்(FCTC) - கட்டுரை 5.3 இற்கு கீழ் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப்பீடத்தால் நிறுவப்பட்ட புகையிலை தொழில்துறை அவதான நிலையத்தின் தகவல் தளமாகும். புகையிலை தொழில்துறை அவதான நிலையத்தின் பிரதான இலக்கானது புகையிலை தொழிற்துறையின் வணிகரீதியிலான செயற்பாட்டு உத்திகள் மற்றும் பிற தலையீடுகளில் இருந்து பொது சுகாதாரக் கொள்கைகளைப் பாதுகாக்க பரிந்துரைக்கின்ற FCTC கட்டுரை 5.3 ன் செயற்பாட்டிற்கு சம்பந்தப்பட்ட புகையிலை தொழிற்துறை நடவடிக்கைகளை கண்காணிப்பதாகும்.

நீங்களும் புகையிலைத் தொழிற்துறையில் குறுக்கீடுகள் மற்றும் தலையீடுகள் பற்றி அறிந்து கொண்டால் புகையிலை தொழிற்துறை அவதான நிலையத்திற்குரியதும் smart phoneகளில் இலகுவாக பதிவிறக்கம் செய்யக்கூடியதுமான TobaccoUnmasked HotSpots mobile Appளிலோ அல்லது tobaccounamsked@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியிலேயோ முறையிட முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை www.cct.lk எனும் இணையத்தளத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இதில் முறையிடும் முறையீட்டாளர்களின் விபரங்கள் இரகசியமானது.

இலங்கையர்களாக, புகையிலைப் பாவனை அற்ற மற்றும் புகையிலை மாசற்ற வளியை சுவாசிக்க நாடு ஒன்றை கட்டியெழுப்புதலானது எமது தலையாய கடமையாகும்.

**புகையிலை தொழில்துறை அவதான நிலையம்,**
**மருத்துவபீடம்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
**29 ம் திகதி மே மாதம் 2019**